©
GOVERNMENT OF TAMIL NADU
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 83] CHENNAI, TUESDAY, APRIL 5, 2016
Panguni 23, Manmadha, Thiruvalluvar Aandu–2047

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES.

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், பெரம்பலூர் மாவட்டம்.**

**பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியம், வயலப்பாடி ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் செய்தல் குறித்த அறிவிக்கை.**

*(ந.க.எண் அ3/1162/2014.)*

**No. VI(2)/42(a-1)/2016.**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியம், வயலப்பாடி கிராம ஊராட்சித் தலைவராக பதவி வகித்து வரும் திருமதி ம. சுந்தரி என்பவர் தம்மீது மேவியுள்ள அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி கிராம ஊராட்சி /அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியது தொடர்பாகவும் விதிமீறல்கள் ஏற்படுத்தியது தொடர்பாகவும் அவர் மீது கண்டறியப்பட்ட பத்தொண்பது குறைபாடுகளும் நிரூபணமாகின்ற நிலையில், கிராம ஊராட்சித் தலைவராக தொடர்ந்து இவரை செயல்பட அனுமதித்தால், நிதிமுறைகேடு மற்றும் விதிமீறல் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவார் என்பதை கருத்தில் கொண்டு, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (1994–ம் ஆண்டு 21–வது சட்டம்) பிரிவு (205) (11)–ன்படி ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் உளத்தேர்வின்படி திருமதி ம. சுந்தரி என்பவரை வயலப்பாடி கிராம ஊராட்சி தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவர், பெரம்பலூரின் செயல்முறைகள் ந.க.எண் 1162/2014/அ3, நாள்: 17–03–2016–ன்படி உத்தரவிடப்பட்டுள்ளது என்ற அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ம் பிரிவு 262(1)–ன்படி இவ்வறிவிக்கையானது வெளியிடப்படுகிறது.

பெரம்பலூர்,
**2016 மார்ச் 17.**

**க. நந்தகுமார்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

## மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், வேலூர் மாவட்டம்.

**வேலூர் மாவட்டம், வாலாஜா ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சென்னசமுத்திரம் ஊராட்சி மன்றத் தலைவரை பதவியிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.3152/2014/அ4.)*

**No. VI(2)/42(a-2)/2016.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு (11)—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி வேலூர் மாவட்டம், வாலாஜா ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சென்னசமுத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் திரு. E.பரசுராமன் என்பவர் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, ஊராட்சி நிதியில் விதிமுறைகள் பின்பற்றாமல் செலவினம் மேற்கொண்டு முறைகேடுகள் செய்து அதிகாரத்தினை பயன்படுத்தி ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தி நிர்வாக சீர்கேடு செய்தது தொடர்பாகவும், நகர் ஊரமைப்புத்துறையின் அனுமதியின்றியும், மனைப்பிரிவு அங்கீகரித்தல் ஊராட்சியின் ஒப்புதல் பெறப்படாமலும், உரிய கட்டணம் வசூலிக்காமலும், விதிமுறைகளை பின்பற்றாமல் தன்னிச்சையாக மனைபிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கியதன் மூலம் ஊராட்சி மற்றும் அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியது தொடர்பாகவும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு (1)—ன்கீழ் பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு ஊராட்சி மன்ற தலைவர் உரிய விளக்கம் தராமையால் வட்டாட்சியரால் ஊராட்சியில் கூட்டம் நடத்தி அனுப்பப்பட்ட ஊராட்சி மன்றத்தின் கருத்தினை பரிசீலனை செய்து உளத்தேர்வின்படி சென்னசமுத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் திரு.E.பரசுராமன் என்பவரை சென்னசமுத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் பதிவிமிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)—ன் கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 12—ன்கீழ் இந்த பதவி நீக்க அறிவிக்கை சம்மந்தமாக அரசிற்கு மேல்முறையீடு ஏதேனும் செய்ய விரும்பினால் ***தமிழ்நாடு அரசிதழில்*** பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம்.

வேலூர்,
2016 மார்ச் 17.

**இரா. நந்தகோபால்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU